# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.06.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்)

**(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*உள்ளக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2:** இவ்வாசகம், (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அவ்வாசகத்தின் சட்டப்பயனானது, விசா ஒன்றின் காலப்பகுதியை அதிகாரிப்பதற்கும் நிரந்தர வதிவிட விசாவின் காலப்பகுதியை அமைச்சர் தீர்மானிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்குமாகும்.

*ச.வ.- ஓ 24/2018*

**(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

***1.*** *இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

***2.*** *(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-* *351 ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''இரண்டு ஆண்டுகளை,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஐந்து ஆண்டுகளை,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;*

*(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், ''ஐந்தாண்டுகளை விஞ்சாத ஆனால் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பத்தாண்டுகளை விஞ்சாத ஆனால் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்*

*(3) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் –*

*''(3அ) (அ) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட காலவரையறைகள் எவ்வாறிருப்பினும், நிரந்தர வதிவிட விசாவின் காலப்பகுதி அமைச்சரினால் தீர்மானிக்கப்படலாம்.*

(ஆ) பந்தி (அ)இன் நோக்கத்துக்காக, "நிரந்தர வதிவிட விசா" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்ட விசா ஒன்று எனப் பொருள்படும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.